DEPOSITION OF WITNESS
( Chapter XXIII Code of Criminal Procedure)
***
IN THE COURT OF SUBORDINATED JUDGE MADURANTAKAM

Calender :
Miscellaneous :
Sessions : SC 78/2020
Deposition of Witness for : PW 3

| Name. | திருமதி. லோகநாயகி |
|---|---|
| Father /Husband Name | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day 16.04.2025

**எதிரிகள் ஆஜர்.**

**CMP. 2/2025ல் பகரப்பட்ட உத்தரவுப்படி .அ.சா.1 மீண்டும் அழைக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1) இறப்பிற்கு நான் சென்றிருந்தேன். இறந்தவர் எனக்கு மாமனார் உறவு முறை. இறப்பில் அ.சா.1 சீக்கிரம் சாவை எடுக்கச் சொல்லி சொல்லவில்லை. இறப்பில் இருந்து பாதியிலேயே நாங்கள் செல்ல என்ன காரணம் என்றால் எதிரிகள் செய்ததால் சென்றுவிட்டோம். போலிசார் என்னை விசாரிக்கவில்லை. அ.சா.2 உடன் மதுராந்தகம் அரசு மருததுவனைக்கு இரவு 8.00 மணிக்கு சென்றேன். அங்கு முடியாது எனக் கூறவே இரவு 8.30 மணிக்கு செங்கல்பட்டு அரசு மருததுவமனைக்கு அழைத்துச் சென்றோம். சென்னை அரசு மருத்துவமனைக்கு இரவு 9.30 மணிக்கு அழைத்துச் சென்றோம். எதிரிகள் தாக்கியதாக கூறும் நேரத்தில் நான் வீட்டுக்குள் தான் இருந்தேன். சம்பவத்தை சுமார் 20,30 நபர்கள் பார்த்தார்கள். சாவு நடந்த வீட்டிற்கும, எங்கள் வீட்டிற்கும் சுமார் 1 கி.மீ தூரம் இருக்கும். சம்பவம் தொடர்பாக என் கணவர் புகார் அளிக்கவில்லை. செங்கல்பட்டு மருத்துவமனையில் வைத்து ஒரு காவலர் புகாரை எழுதினார். அங்கிருந்த காவலரிடம் காயம் அதிகமாக இருப்பதாகக் கூறினார். அதனால் இங்கிருந்த காவலர் என் கணவரை அழைத்து விசாரித்தார்.

மறுவிசாரணை – இல்லை.